## Chapter - 17 - Speech for 25th March 2023 – 2 - The Divine Soul

இந்த அத்தியாயம் மட்டுமல்ல பெரும்பாலான அத்தியாயங்களை அதிமனதின் மூன்று நிலைகள் என்னும் பார்வையிலேயே புரிந்துக் கொள்ள நினைக்கிறேன். அதன் VARIATIONS அல்லது MODIFICATIONS தான் மற்ற அத்தியாயங்கள் என்றே அணுகுகிறேன். அதோடு தத்துவமாக மட்டுமே பேசி விட்டு சென்று விடாமல் அதை நடைமுறையில் செய்து பார்க்க முடியுமா என்பது என் ஒரு வித பொழுது போக்கு என்று கூட கூறலாம். அப்படி சொல்லும் போது உயர்ந்த தத்துவங்களை நான் நீர்த்து போக செய்கிறேன் என்று கூறுபவர்கள் உண்டு. சென்ற கூடலுக்கு முன் கூடலில் நான் THY WILL என்று சொல்பவர்களுக்கு என் வழிகள் சரிவராது என்று கூறியதை பற்றி இன்னொரு குழுமத்தில் COMMENT செய்யப்பட்டு இருந்தது. இப்போதும் சொல்கிறேன். அவர்களெல்லாம் பெரிய ஆன்மாக்ககள், யோகத்திற்காக பிறந்தவர்கள். ஆனால் நான் அன்னை என்றால் ஆனந்தமாமே என்ற சுயநலத்திற்காக வந்தவன்.

நாற்பது வருடம் யார் யார் பேச்சையோ கேட்டு உருப்படாமல் போய், கர்மயோகி பேச்சை கேட்போம் என்று வந்ததால் வளம் பெற்றவன். அதனால் MOTHER ரிடம் ஒரு DEAL போட்டுக் கொள்பவன். பத்து பிரார்த்தனை செய்தால் Mother ஐந்து THY WILL ஆக எடுத்துக்கோ அது இதுவரை நீ எனக்கு செய்ததற்கு என் நன்றியறிதல், மீதி ஐந்தை MY WILL ஆக செய்து கொடுத்து விடு என்பதே என் வழி - பல நேரங்களில் நானே பார்த்துக் கொள்கிறேன் என்னும் நிலையில் தான் இன்றும் இருக்கிறேன். அந்த நிலையில் இத்தகைய உயர்சித்தங்களை பின்பற்றுவதால் வாழ்வை, முடிவை பலனை மாற்றமுடியுமா என்பது தான் என் ஆராய்ச்சி. அது மட்டுமல்ல கர்மயோகி இத்தனைப் புத்தகங்கள் எழுதியதே வாழ்வின் அச்சட்டங்கள் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதற்குத் தான். அப்படி இருக்கும் போது அதை என் பயன்பாட்டிற்கு என் நோக்கில் பார்ப்பது எப்படி தவறாக இருக்க முடியும். அன்னைக்கு எதிரானதாக, அன்னை விரும்பும் பண்புகளுக்கு எதிரானதாக, பரிணாம வளர்ச்சிக்கு எதிரானதாக,, சித்த உயர்வுக்கு எதிரானதாக எதுவும் இருக்கக் கூடாது என்பதே முக்கியம்.

அப்படிப் பார்க்கும் போது, மூன்று நிலைகள் என்பது, இறைவன் ஒரு ஆனந்தத்தை அனுபவிக்க ஒரு குறிப்பிட்ட படைப்பில் என்னவெல்லாம் செய்யலாம் என்னும் real idea வோடு இருப்பது ஒரு நிலை. தொகுத்தறியும் சித்தம் என்னும் நிலை. அதை - தான் படைத்த படைப்பின் வரையறைகளுக்கு உட்பட்டு, ஆனால் தன்னையும் மறக்காமல், அதை எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்னும் நிலை பகுத்தறியும் சித்தம் என்னும் இரண்டாம் நிலை. இவ்விரண்டைப் பற்றிய நினைவு, அல்லது

ஆன்மாவைப் பற்றிய நினைவு இருந்தும், இறைவனை நோக்கிய பார்வையோடு இருந்தும், சூழலுக்கு ஏற்றவாறு மாறிவிடும். ஆனால் பரிணாமத்தில் முன்னேற நினைக்கும் - ஆன்மீகத்தை நாடும் மனிதன் - என்னும் மூன்றாம் நிலை.

இந்த மூன்று நிலைகளும் நமக்கு எப்போதும் நினைவில் இருந்தால், அல்லது உணர்வில் உணர்ந்து ஒரு தெளிவு பிறந்தால், அதை நம் வாழ்வில் நடந்த ஏதோ ஒரு நிகழ்வோடு பொருத்திப் பார்க்க முடிந்தால், அதை வழிகாட்டியாக வைத்து மற்றவற்றை மாற்ற முடிந்தால், நாம் ஓரளவு அதிமனநிலை, இறை ஆன்மா போன்றவற்றை புரிந்துக் கொள்ள ஆரம்பித்து இருக்கிறோம் என்று எடுத்துக் கொள்ளலாம்.

நான் அடிக்கடி சொல்வது போல என் கம்பெனியை பற்றி நான் கண்ட கனவுகள் என் தொகுத்தறியும் சித்தம். அதை எந்த அளவிற்கு நடைமுறையில் கொண்டு வரமுடியுமென்று வரையறுத்து வெளிப்படுத்துவது பகுத்தறியும் சித்தம். என் கனவுகள், என் ஆனந்தம் ஆகியவற்றின் பார்வை இருந்தாலும், சூழலின் தாக்கத்தில், அதில் வரையறையை புகுத்தியதால், அல்லது என் manager , என் consultant என்று எல்லாமே என்னை என் ஐடியாவை வெளிப்படுத்துவதாக இருந்தாலும், அவர்களின் limitations என் limitations ஆக மாறும் ஒரு individual ஆக த்தான் நான் இருக்கிறேன். அதாவது என் ஆனந்தத்திற்காக என் idea ஏராளமான சக்திகளாகவும், ஆற்றல்களாகவும், வடிவங்களாகவும் மாறிவிட்டது. REAL IDEA MULTIPLYING ITSELF IN COUNTLESS FORCES AND FORMS.

இப்படி ஏராளமான ஆற்றல், சக்தி, வடிவங்கள் வெளிப்படும் போது அது வாழ்வில் ஒரு செயல், ஒரு நிகழ்வு என்னும் ஒரு வடிவமாகத் தான் வெளிப்படுகிறது. அதன் பலன் நமக்கு இன்பத்தையோ, துன்பத்தையோ கொடுக்கிறது. ஆனால் அதை இறை ஆன்மா என்று பார்க்கும் போது, அதில் இன்னும் அறியாமை புகவில்லை. தன்னை பற்றிய தன் படைப்புகள் பற்றிய அனைத்தையும் அது அறிந்தே இருக்கிறது என்னும் போது அதாவது RELATIONSHIP BETWEEN HARMONY AND DIVINITY ஐ எப்போதும் அது நினைவில் கொண்டுள்ளது என்னும் போது அந்த பார்வையில் அதாவது இறைவனுக்கும் நமக்கும் உள்ள தொடர்பு என்ன, இப்போது துன்பம் என்று தெரிவதற்கு பின் உள்ள ஆனந்தம் என்ன என்று ஆராய்ந்தால், இறை ஆன்மாவின் செயல் நமக்குப் புரியும். இந்த உலகம், படைப்புகள், இறைவனின் சித்தத்தில் இருந்து உருவானது என்பதால் அல்லது MIND OF DIVINE இல் இருந்து உருவானதால் அது super mind - அதிமனம். அந்த சித்தம் TRUTH CONSCIOUSNESS சத்திய சித்தம் - அந்த பார்வையில் பார்க்கும் போது அல்லது அதன் அடிப்படையில் எதையும் சிந்திக்கும் போது நம்மால் நம் இறை ஆன்மாவை அதன் செயலை புரிந்துக் கொள்ள முடியும். இதற்கு முந்திய அத்தியாயம் வரை

மேலிருந்து கீழே இறங்கி வந்து  இறை சுபாவமாக மாறி அந்த நிலைகளை பற்றி சிந்தித்த விதங்களில் இருந்து - இந்த சுபாவம் - எப்படி இறைவனை நோக்கி, இறைவனாக மாற பயணிக்கிறது ASCENDING BACK என்னும் நிலையில் நம் சிந்தனையை மாற்ற வேண்டும்.  இந்த நிலையில் பகவான் நமக்கு தெய்வீக வாழ்வு நிச்சயம் என்னும் assurance ஐ தருகிறார். அந்த KNOWLEDGE , ஒரு சக்தி அதை வெளிப்படுத்துவது ஒரு ஆற்றல். அது வாழ்வில் வெளிப்படுத்தும் RESPONSE -LIFE RESPONSE அந்த LIFE RESPONSE -ஐ வாழ்வு தரும் பலனை, மறுமொழிகளை நம்மால் மாற்ற முடியும் என்று கர்மயோகி கூறும் போது, அதற்கான software - இதை செய்தால் இது நடக்கும் என்னும் அளவுக்கு ஒன்றை உருவாக்க முடியும் என்று கூறும் போது LIFE DIVINE தனிமனிதனின், இந்த பிரபஞ்சத்தின் ஜாதகம் என்று கூறும் போது அதை முயன்று பார்ப்பது தவறில்லை என்றே நினைக்கிறேன் .

இந்த சட்டங்கள் ஒவ்வொரு கணமும் செயல்பட்டு கொண்டு இருக்கிறது என்பதற்கு அடையாளம் நம் ஆழ்ந்த, உண்மையான, முன்னேற்றத்திற்கான பிரார்த்தனைகள் உடனே பலிப்பதும், மற்றவை கிணற்றில் போட்ட கல்லாக இருப்பதும் தான்.  அதே போல இனி மாற்ற முடியாது, திருத்த முடியாது, வர முடியாது என்பவை கடந்த கால சமர்ப்பணம், மனமாற்றம் போன்றவற்றில் மாறும் போது அந்த காலத்தை மாற்றும் சட்டங்கள் உண்டு, காலத்தை கடந்த இறை நிலை உண்டு, அதன் சட்டங்கள் இப்போதும் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதை தெளிவுபடுத்துகிறது.

அதற்கான நடைமுறை விளக்கத்தைத் தான் இந்த அத்தியாயம் புரிய வைக்கிறது. நாம் வெற்றி பெற்ற இடங்களில், பிரார்த்தனை பலித்த இடங்களில் அது தந்த கண நேர சுகத்தில் லயித்து விடுவதால் நாம் அதன் process -ஐ ஆராய்வதில்லை. அதற்கான keyword  இந்த அத்தியாயத்தில்  இருப்பது- WE SHOULD BE ABLE TO ENJOY BOTH ONENESS AND DIFFERENCES .

நாம் இறைவனிடம் இருந்து பிரிந்து நிற்கும் நிலையும், இறைவனுடனான நம் ஒருமையும் நமக்குப் புரிய  வேண்டும், அதில் ஒரு தெளிவு வேண்டும், அதை உணர வேண்டும், இவை அனைத்தும் ஒரே நேரத்தில் இருக்க வேண்டும். அந்த கணத்தை ஆனந்தமாக அனுபவிக்க வேண்டும், இந்த நிலையை, STATUS ஐ தான் இறையான்மா என்கிறார். அந்த நிலையில் நம் சித்தமும் இறைவன் சித்தமும் எப்படி வேறு வேறாக இருக்க முடியும் என்று கேட்கிறார்.  துன்பம், அறியாமை, போன்ற நிலைகளில் நம் எண்ணம், ஆசை, எதிர்பார்ப்பு, செயல், உணர்வு ஆகியவற்றை இறைவனின் பார்வையில்,ஒருமைக்கான பார்வையில்,படைப்பின் தத்துவங்களின் பார்வையில், manifesting aspect ன் பார்வையில் பார்த்தால் நமக்கு முழுமை புரியும். நாம் பெற வேண்டிய ஆனந்தத்தை பெறுவோம். நாம் பெற

வேண்டிய வளர்ச்சியை பெறுவோம். முன்பு இழந்ததாக நினைத்ததைக் கூட மீண்டும் பெறுவோம்.

நான் கடந்த சில கூடல்களில் சொன்ன என் மதுரை ஆபீஸ் அனுபவங்கள் எப்படி நடந்த முடிந்த விஷயத்தை மாற்ற முடியும் என்பதை காட்டும். நான் மெஷின் வாங்கியதை பற்றி சொன்னது எப்படி 6 மாதத்தில் முடிக்க வேண்டிய வேலையை 45 நாட்களில் முடிக்க முடிந்தது எனபதை காட்டும். இவையெல்லாம் காலத்தை கடக்கும் நிலை ஒன்று இருக்கிறது என்பதற்கு உதாரணங்கள் . இவற்றை எல்லாம் அன்னை அருள் என்று பார்த்து கடந்து விடுவதால் நாம் அது நடந்த விதத்தை , ஏன் நடந்தது, எப்படி நடந்தது எனபது போன்றவற்றை ஆராய்வதில்லை.

நாம் எந்த அளவிற்கு இழை இழையாக நம் அறியாமை உணர்ந்து, சுமுகம் , ஒருமை, இணக்கத் தீர்வு, அமைதி என்று கொண்டு வருகிறோமோ, அதற்கு ஏற்ற பலன் எவ்வளவு நாளானாலும் வருகிறது என்பதையே இந்த உதாரணங்கள் காட்டும் . அந்த அந்த நிலைக்கு ஏற்ற , இன்டேன்சிடி ,- தீவிரம் , டெப்த் - ஆழம், aspiration - ஆர்வம் நிலைக்கு ஏற்ற பலன் ஒவ்வொரு முறையும் வருகிறது.

மதுரை சம்பவம் ஆனந்தமாக மாற இரண்டு வருட முயற்சி தேவைப்பட்டது. machine சம்பவங்கள் ஆனந்தமாக மாற ஆறு மாத முயற்சி தேவைப்பட்டது. இதிலிருந்து தெரிவது என்னவென்றால் பரிணாமத்தில் முன்னேறுவது, உயர்சித்தம் பெறுவது, இறை சுபாவத்தை பெறுவது என்பது ஒரு constant process . தினம் தினம் நடக்கும் நிகழ்வுகளில் மட்டுமல்ல முன்பு நடந்தவைகளைக் கூட இழை இழையாக அறியாமையை விலக்கி ஒருமை, இறை பண்புகளின் பார்வையில் பார்த்தால், இது பெரிய வேலை, அதுவே நம் வேலை என்பது புரியும்.

எந்த நிமிடம் அது perfect harmony , perfect evolution , perfect sincerity , perfect humility போன்ற நிலைகள் வருகிறதோ, அந்த நிலையில் அது க்ஷணத்தில் பலிக்கிறது. இது வரை இழந்தவை மீண்டும் கிடைக்கிறது. அது அன்னை புனிதப்படுத்தி தரும் நிலை. இனி அத்தகைய பிரச்சினைகள், துன்பம், எதுவும் இனி நம் வாழ்வில் மீண்டும் வராது என்கிறார். IT IS THE MOMENT OF PERFECT HARMONY WITH THE DIVINE என்கிறார்.

உதாரணம் - NIRMALA SEETHARAMAN 2017 - 2019 - 2020 - LOCKDOWN etc ) Even after doing all – don't touch that mother pushed off. Yesodha – lost house. All are characters that Mother don't like. ego based things should not be there is important. That touched divine soul.

( 5 Minutes)

இறையான்மாவை தொட்டு விட்டோம் என்பது எப்போது தெரியும் என்றால் - பிரச்சினைகளும், முரண்பாடுகளும் அங்கு மறைந்து விடும். முன் எப்போதும் இல்லாத சுமுகம் வந்து இருக்கும். நமக்கு ஒத்துழைக்காதவர்கள் ஒத்துழைப்பார்கள். அல்லது அவர்கள் விலகி தேவையானவர்கள் வருவார்கள். சிறு முயற்சிக்கு பெரும் பலன் கிடைப்பது. சிறு சிந்தனைக்கு பெரும் ஞானம் வருவது, உள்ளுணர்வு உட்பார்வை வளர்வது என்று நடக்கும் விஷயங்கள் நாம் பரிணாமத்தில் முன்னேறுகிறோம் இறை ஆன்மாவை செயல் பட விடுகிறோம் என்பதைக் காட்டும்.

நாம் அகந்தையால் செயல்படுகிறோம். அதன் வடிவங்களான அபிப்ராயம், முன் முடிவுகள், எதிர்பார்ப்புகள் அதை ஒட்டிய செயல்கள் என்று இருக்கிறோம். அதுவே ஞானம், பொதுப்புத்தி என்று நினைக்கிறோம். ஆனால் அது அறியாமையின் ஆரம்பம் என்கிறார். The moment we start accepting facts, ignorance starts என்கிறார். Same kaala katathil Pure money – going away from goal -– pure money – cheerfullness – how all changed. ( 3 minutes ).

அறியாமையை அண்ட விடாத நிலை இறை ஆன்மா என்னும் போது நாம் நம் அபிப்ராயங்கள், அனுபவங்கள் அது தந்த அறிவு ஆகியவற்றில் இருந்து முழுதும் வெளிவந்து ஒரு முழுமையை, ஒரு விஷயத்திற்கு பின்னால் இருக்கும் உண்மையை, அது சொல்ல வரும் பரிணாம தத்துவத்தை புரிந்துக் கொள்வது, வாழ்வை அது தரும் மறுமொழியை புரிந்துக் கொள்ள உதவும். மாற்ற முயல முடியும். காரணம் அது சத்தியத்திற்கான பாதை என்பதால் இறைவன் வந்த பாதை, அதை அன்னைக்கான sincerity என்கிறார் கர்மயோகி.

இப்படி செய்யும்போது நம் எண்ணம், நோக்கம், உணர்வு, செயல் அனைத்தும் அன்னையின் அவதார நோக்கத்தை ஒட்டி இருப்பதால் - நாம் அன்னைக்கு நம் சின்சரிட்டி ஐ காட்டியது போல - அவர் தன்னுடைய சின்சிர்ட்டி ஐ நமக்கு காட்ட வேண்டியது அவர் கடமை. grace என்பது அவர் காட்டும் sincerity ன் வடிவம். அவர் நம் வாழ்வில் பலிக்கும் விதம் அது. . பரிணாம வளர்ச்சிக்கு நீ செய்யும் எந்த முயற்சிக்கும் என் அருள் உன்னை தேடி வரும் என்று அன்னை கூறுவதால் அவர் வார்த்தையை அவரே மீற முடியாது என்பதால், நம் முயற்சிக்கான பலன் அனைத்தும் ஆனந்தமாக வருகிறது. இப்படி முயன்று பார்ப்பது thy will க்கு எதிரானது என்று எப்படி சொல்ல முடியும் என்று உண்மையாகவே புரியவில்லை. sincerity என்பது நாமே இறைவன் ஆவதற்கான நம் சித்தத்தின் ஆற்றல், சக்தி. அந்த நிலையை நாம் தொட்டுவிட்டால் அங்கிருந்து அன்னை அதை எடுத்துக் செய்கிறார் என்கிறார் கர்மயோகி . அதனால் ஒவ்வொரு கணமும் நமக்கு

சித்தத்தில் உயர அன்னைக்கான sincerity ஐ காட்ட நமக்கு அமையும் வாய்ப்பு. அதைத் தருவது இடையறாத நினைவு.  நம்மை பற்றியும், அன்னையை பற்றியும் தெரிந்தவைகளை இடையறாது இணைத்துப் பார்ப்பது ஓரளவு இறை ஆன்மாவின் நிலை எனலாம்.

உண்மையில் நமக்கு நம்மைப் பற்றி எதுவும் தெரியாது. நம்மைப் பற்றி நமக்கு தெரிந்ததாக நினைப்பது எல்லாம் பிறரின் அபிப்பிராயங்களை ஒட்டிய நம் அனுமானங்கள். அதை ஒட்டிய நம் நடத்தை, அது ஏற்படுத்திய சுபாவங்கள், அதை காப்பாற்ற நாம் போட்டுக் கொண்ட முகமூடிகள், கட்டமைத்த பிம்பங்கள் என்று அவற்றையே இடையறாது நினைத்து பின் அது தான் நாம் என்று நம்ப ஆரம்பித்து விட்டோம்.

உதாரணமாக நான் மாடு மேய்க்கக் கூட லாயக்கில்லை என்று பலரும் கூறிய போது அதை நம்பியதால் அப்படித் தான் இருந்தேன். நண்பருக்கு உயிரையும் கொடுப்பார் என்று என்னை ஏற்றிவிட்டால் முட்டாள்தனமாக உதவிக்குச் செல்வேன்.  நான் வேலை செய்த ஒரு கம்பெனியின் முதலாளி - உனக்குள்ளே ஒரு fire இருக்கிறது. ஏன் இப்படிப்பட்டவர்களோடு சேர்ந்து வீணாகிறாய் என்னும் போது சற்று அறிவு வந்தது. என்னை உணர்ந்தேன். அதன் பிறகு கர்மயோகி காட்டிய வழிகள், என் பலம், பலவீனம் ஆகியவற்றைக் காட்டிய போது என் பலம், திறமை எனக்கு புரிந்தது.

அப்படி நாம் யார் என்பது நமக்கு புரிய வேண்டுமென்றால், நாமே இறைவன் என்பதை நம்ப முடியாவிட்டால் கூட, அன்னையைப் பற்றிய இடையறாத நினைவு இருந்தால் நாம் அறிந்த உயர்ந்த நிலையில் நம்மால் செயல்பட முடியும்.  நம்முள் அன்னை இருக்கிறார் என்னும் நம்பிக்கை வளர்ந்தால் அதுவே இறைவனை நோக்கிய பார்வையாக எடுத்துக் கொள்ளலாம். அதற்கு அடிப்படை முன் உதாரணகளில்  சொன்னது போல intensity – தீவிரம்,  டெப்த் - ஆழம் aspiration - ஆர்வம்.  இந்த மூன்றும் இருக்கும் போது இந்த யோகத்தின் அடிப்படையான அகமே ஆரம்பம் என்னும் நிலைக்கு வருவோம்.  அது ஆதியை மூலத்தை, இறைவனை அடையும் வழி என்கிறார். சாதனை என்பது உள்ளே இருக்கிறது. அதன் பகுதிகளான மனதில், மனப்பான்மையில். எண்ணத்தில், சிந்தனையில், நோக்கத்தில் இருக்கிறது. மற்ற அனைத்தும் அவற்றின் வெளிப்பாடுகளே என்று புரிந்தால் நாம் நம் இறையாற்றல், இறை சக்தியை உணர்ந்துவிட்டோம், அதை செயல்படுத்த முடியும், அல்லது  செயல்பட விட முடியும். நல்ல வேலை நல்ல கல்வியில் இருந்து ஆரம்பம் ஆகிறது என்பது நமக்குப் புரிகிறது. நல்ல செல்வத்திற்கு ஆரம்பம் செயலில் திறமை, திறன் என்பதும், அந்தஸ்து, அதிகாரம்,

நல்ல அனுபவத்தில், விவேகத்தில் , பாகுபாட்டில் ஆரம்பமாகிறது என்பதும் நமக்குப் புரிகிறது.

ஆனால் , அது போல சாதனை உள்ளே இருந்து ஆரம்பிக்கிறது என்பது நமக்கு தோன்றுவதில்லை. உள்ளே என்பது உள்ளே உள்ள இறைவனில், இறை ஞானத்தில் ஆரம்பிக்கிறது. பிரார்த்தனை முதல், சமர்ப்பணம் முதல், கடந்த கால சமர்ப்பணம் முதல் அனைத்தும் உள்ளே இருந்து ஆரம்பிக்கிறது. அதன் ஒரு பண்பில் இருந்து ஆரம்பிக்கிறது. உதாரணமாக கடந்த கால சமர்ப்பணம் பொறுமையில் ஆரம்பிக்கிறது. இங்கு பொறுமை என்பது எல்லாவற்றிலும் இறைவனுடன் ஒன்றுவது, என்னில் இறைவனைப் பார்ப்பது, என்னில் எல்லாரையும் பார்ப்பது என்ற ஆராய்ச்சியின் பொறுமை. இறை ஆன்மாவில் அறியாமை கலக்க முடியாததற்குக் காரணம், அது எப்போதும் கொண்டிருக்கும் இறைவனுடனான தன் தொடர்பை பற்றி அது கொண்டு இருக்கும் விழிப்புணர்வு. அது போல நம் அகந்தை அல்லது நம் மனம், நம் அன்னையுடனான தொடர்பை மறக்காமல் இருக்க முடிந்தால் , அனைத்திற்குமான ஞானம் நம்மிடம் வரும். சராசரி மனிதன் என்னும் நிலையில் இருந்து அடுத்தடுத்த உயர்ந்த நிலைக்கு செல்ல முடியும். அந்த ஞானம் காலத்தை கடந்த ஞானம் என்பதால் காலத்தில் நடந்ததை கூட மாற்ற முடியும். அது இறை சக்தி, ஆற்றல் மூலம் நடக்கும் என்பது அது செயல்படும் வழியை சரி செய்வது.

ஒரு மிஷினில் சிறு குறைகள் இருந்தாலும் அது ஓரளவு வேலை செய்யும், ஒரு நிலை வரை வேலை செய்யும். ஆனால் அதன் முழு potential க்கு வேலை செய்ய வேண்டும் என்றால் அதன் அத்தனை குறைகளும் சரி செய்யப்பட வேண்டும், வாங்கியபோது எப்படி இருந்ததோ அந்த நிலைக்கு சரி செய்ய வேண்டும். அதாவது நாமே அன்னை ஆகும் வரை நமக்கு உள்ளே வேலை இருக்கிறது. அந்த அளவிற்கு செல்ல முடியாது என்னும்போது - உடல், உணர்வு, மனம் ஆகிவற்றை புரிந்து கொண்டு அதை நாம் அறிந்த உயர்ந்த நிலைக்கு உயர்த்துவது அங்கேயே எப்போதும் இருப்பது என்பது மெஷினை வாங்கியது போது இருந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு சமம். அத்தகைய சட்டங்கள் சத்தியம், அவை நிச்சயம் செயல்படுகின்றன என்பதற்கு உதாரணமாகதான் கடந்த கால சமர்பணத்தை எடுத்துக் கொண்டேன். முன்பு சொன்ன உதாரணங்களை வைத்து அதை புரிந்து கொள்ள முடியும்.

எந்த அளவிற்கு நமக்கு ஐக்கியம் வளர்கிறதோ, எந்த அளவிற்கு மறுபக்கம், முழுமை புரிகிறதோ, அந்த அளவிற்கு பலன் வருகிறது. பொதுவாக மனமாற்றம் என்னும் நிலையிலேயே, தவறை புரிந்து ஏற்றுக் கொள்வதாலேயே பல விஷயங்கள் மாறுகிறது. அதை mind மனதில் செய்கிறோம். அல்லது வாயால்

சொல்கிறோம். அதற்கான பலன் வருகிறது. அதன் பிறகு vital லில் பிராணனில் செய்ய வேண்டும் என்பது இன்னும் உள்ளே செல்வது. அவருடன் மேலும் ஒன்றுவது. எதிரியை மன்னித்து விட்டேன் என்று மனது கூறும் என்றாலும் அது உணர்வில் இருக்காது, ஆராய்ந்தால் அவர் மேல் பல இடங்களில் குறை இருப்பது தெரியும். நாம் சரி தான், இருந்தாலும் அன்னைக்காக, கடந்த கால சமர்பணத்திற்காக இதை ஏற்றுக் கொள்கிறேன் என்ற அளவில், நம் அகத்தையுடனான தொடப்பிலேயே இருப்போம். அதை அகற்ற முற்படும் போது எரிச்சல் வரும்,. கோபம் வரும் அல்லது இரண்டையும் விலக்க முற்படும் போது, நம் இயலாமை மேல் பச்சாதாபம் வரும். அல்லது விரக்தி வரும். இதெல்லாம் தேவையா என்று தோன்றும். முன்பு சொன்ன cheerfulness உதாரணத்தை இதில் பொருத்தி பார்த்தால்  இது விளங்கும்.

ஆனால்

ஒவ்வொன்றிலும் இருக்கும் இறைவனை அவன் நோக்கத்தை ஆராய்ந்தால் சுமுகம்  வரும்.  அந்த சுமுகம் இறைவன் விரும்புவது என்பதால் அந்த நிலைக்கான ஆனந்தம் தரும் செயல் ஒன்று நடக்கும். அது நடந்தாலும் - கடந்த கால சமர்ப்பணம், சமர்ப்பணம்  போன்றவை காலத்தை கடந்தது என்பதை ஏற்க முடியாது.  எண்ணம் ஏற்றாலும் மனம் ஏற்காது. மனம் புரிந்துக் கொண்டால் உணர்வு ஏற்காது. அன்னை மேல் கொண்ட பக்தியால் ஒரு சமயம் உணர்வு ஏற்றாலும் . அதை தாண்டி எதிர்பார்ப்புகளால் உடலில் படபடப்பு இருக்கும்.

இறைவன் ஆனந்தத்திற்காக உலகை படைத்தான்.  எந்த நேரமும் எந்த செயலிலும், எந்த அசைவிலும் அவன் விரும்பிய ஆனந்தத்தை இறை ஆன்மா அனுபவிக்கிறது. அது நமக்கு உணர்வாக புரிந்தால், அது உடலிலும் , மனதிலும் அமைதியை தந்தால் , ஒரு நிமிடமானாலும், அது பெரிது என்கிறார் கர்மயோகி. அதை காப்பாற்றி வளர்த்து முழு பயன் பெறுவது யோக பயிற்சி என்கிறார். ஆனால் இதை செய்யலாம்  என்னும் போது பெரும்பாலும் ஏராளமான தடைகள், மனத்  தடைகள், இதெல்லாம் தேவையா, எல்லாரும் இப்படித்தான் செய்கிறார்களா, அன்னையை அறியாதவர்களுக்கு இது பொருந்தாதா , நமக்கு மட்டும் ஏன் இப்படி எல்லாம் நடக்கிறது, என்றெல்லாம் கேள்வி எழுகிறது.  அதன் பின்னால் உள்ள காரணங்களை ஆராய்ந்தால், மனதின் கட்டமைப்பு, அகந்தையின் அடிப்படை புரிந்தால் நாம் அதிலிருந்து வெளியே வர முடியும்.

உதாரணமாக, நாம் காட்டுக்கு செல்கிறோம். எதிரில் ஒரு சிங்கம் வந்து விட்டது என்றால் திகைத்து நிற்போம். செய்வது அறியாது நிற்போம். அல்லது அப்போது என்ன தோன்றுகிறதோ அதை செய்வோம். அதுவே வனத்துறையுடன் அவர்கள் வண்டியில் சென்றால், அவர்களுக்கு அதன் உபாயம் தெரிந்து இருக்கும். எளிதாக

தப்பிக்க முடியும் அல்லது ஒரு AK 47 துப்பாக்கி கையில் இருப்பதாக கொள்வோம், இங்கு உண்மையில் சிங்கம் தான் நம்மிடம் மாட்டிக் கொண்டு இருக்கிறது என்றாகி விடும்.

இதன் தத்துவம் நம் எதிரில் இருக்கும் பிரச்சினைகள், துன்பங்களை விட, நம் சூழலை விட , நம் resources பெரிதாக இருந்தால், problem என்பது முதலில் challenge என்று ஆகிறது. அதன் பின் அது சூழலை control செய்வதற்கு முன்னேறுகிறது. பிரச்சினையை அடியோடு ஒழித்து வெற்றி பெற முடிகிறது. அது போல பிரச்சினைகளை அதை விட பெரிய resources ஆன அன்னையை, அன்னை முறைகளை ஏற்றுக் கொண்டு கையாளும் போது பிரச்சினை தான் திருவுருமாறுகிறது.

அப்படி நாம் ஏன் செய்ய முடிவதில்லை என்பதற்கு பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் அதன் சாரமாக நான் எடுத்துக் கொள்வது insipid , horror element , subconscious perversion என்னும் நிலைகளை.

insipid என்பது இருக்கும் நிலை நமக்கு ருசிப்பது. நம் துன்பம், நம் பிரச்சினை நமக்கு பிடித்து இருப்பது. காரணம் அந்த பிரச்சினை, சோகம் துன்பம் தரும் சுய பச்சாதாபம், நமக்கு ஒரு சுய முக்கியத்துவத்தை தருகிறது. அந்த முக்கியத்துவம் நமக்கு பிடித்து இருக்கிறது. என் பிரச்சினையை நான் தான் தீர்க்க முடியும் அல்லது யாரும் தீர்க்க முடியாது என்று இருப்பது. நமக்கு நாமே கொடுத்து கொள்ளும் முக்கியத்துவம். மிக சாதாரணமான உதாரணம் என்றால் - டாக்டர் ஏராளாமான டெஸ்ட் செய்ய சொல்லிவிட்டு பார்த்தால் ஒன்றும் இல்லை என்று வந்தால் - சந்தோஷ பட்டாலும் எதோ ஒரு மூலையில் சப்பென்று இருக்கும். பெரிய பிரச்சினை இல்லாத காலங்களில் நம் மனதை கவனித்தால் வாழ்வே சப்பென்று இருப்பது போல இருக்கும். இத்தகைய மன நிலைகள் சமர்ப்பணம் அல்லது கடந்த கால சமர்ப்பணம் இரண்டையும் சரியாக செய்ய விடுவதில்லை. அடுத்தது நமக்கு நாமே அளிக்கும் முக்கியத்துவம் மட்டுமல்ல, அந்த மாதிரி நேரங்களில் பிறர் நம் மீது காட்டும் அக்கறை, கவனிப்பு போன்றவை நமக்கு பிடித்து இருப்பதால், அந்த துன்பம் தொடர வேண்டும் என்றே நினைக்கிறோம். இந்த மனநிலைகள் எல்லாம் insipid இல் வரும். தெரிந்தே தவறு செய்வது, முன்பு செய்த தவறில் பாடம் கற்றுக் கொண்டாலும் பின்பும் திரும்ப அதே தவறை செய்வது, பிரார்த்தனைகளில் கூட அதை அன்னை எப்படி செய்ய வேண்டும் என்ற condition னோடு பிரார்த்தனை செய்வது போன்ற மனநிலைகளும் அதற்கு உதாரணம்.

இவையெல்லாம் எனக்கு இல்லை என்று சொல்பவரே அதிகம். யாராவது பிரச்சினை தீர வேண்டாம் என்று நினைப்பார்களா என்று கேட்பவர் அதிகம்.

ஆனால் பெண்ணுக்கு திருமணம் ஆனால் நமக்கு துணை இருக்காதே என்று நினைத்த தாயார் அதனால் திருமணம் நடக்க கூடாது என்று நினைத்த தாயார், தன் வியாதி குணமானால், கணவரின் attention குறைந்து விடுமோ என்று நினைத்து வியாதி தீரக்கூடாது என்று இருந்த ஒரு அன்பர்  என்று கர்மயோகி எழுதிய பல உதாரணங்களை நம்முடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் இது போன்ற பல இடங்களில் பிரச்சினையை சமர்ப்பணம் செய்யாமல், தீர விரும்பாமல் இருப்பது தெரியும்.

இரண்டாவது horror element . நம் இறை ஆன்மா உண்மையில் ஏங்குவது இறைவனை உணரும் அந்த சிலிப்பிற்கே.  ஆனால் ஆழ் மனதில் அதை negative ஆக புரிந்துக் கொண்டு thrill க்கு ஆசைப்பட்டு செய்யும் செயல்கள் எல்லாம் அப்படிப்பட்டவையே. நமக்கு இயல்பாகவே அத்தகைய negative thrill பிடிக்கிறது என்பதற்கு சில உதாரணங்களில் இருந்து பார்க்க முடியும். உதாரணமாக கிருஷ்ணன் கம்சன் கதையை ஒரு குழந்தைக்கு சொல்வதாக வைத்துக் கொள்வோம். அதில் கிருஷ்ணனைப் பற்றி வர்ணனனை குறைவாகத் தான் இருக்கும். ஆனால் கம்சனின்  உருவத்தை, பெரிய மீசை, பெரிய பட்டாகத்தி என்று விலாவாரியாக விளக்குவோம். ராமாயணத்தை  சொல்வதாகக் கொள்வோம். அதிலும் ராமனைப் பற்றி குறைவாகத் தான் சொல்வோம். ராவணன், அவன் பராக்கிரமத்தை பத்து தலை, பெரிய மீசை, ஆஜானுபாகு உருவம் என்று விலாவாரியாக விளக்குவோம். கணவனோ, பிள்ளைகளோ வருவதற்கு  சற்று late ஆனால் நல்லதாக ஒன்றும் நினைக்கத்  தோன்றாது.  யோசிப்பது எல்லாம் நெகடிவாகவே  இருக்கும்.

நான் பொதுவாக காலை 5 மணிக்கு எழுவேன். வெளியூரில் இருக்கும் போது மனைவி 5.00 அல்லது 5.15க்கு அலைபேசியில் அழைப்பாள்.  சில நாட்கள்  அசதி காரணமாக தூங்கிவிட்டால், தொடர்ந்து அடித்தபடி இருக்கும். எடுத்தவுடன் ஏன் உடனே எடுக்கவில்லை, என்னவோ ஏதோ என்று பயந்துவிட்டேன் என்பாள். கோடிக்கணக்கில் பணக்கட்டை எண்ணி எண்ணி அசதியில் தூங்குகிறார் என்று நினைக்கலாம் இல்லையா? நினைக்க மாட்டாள்.  TV serial களில் , சினிமாக்களில் சோகக் காட்சியில் ஒன்றும் அளவிற்கு நம்மால் சந்தோஷமாக, நகைசுவை காட்சிகளில் ஒன்ற முடியாததை கவனித்துப் பார்த்தால் இது மேலும் புரியும். horror films பிடிப்பது, road இல் accident ஐ கூட்டமாக அர்த்தமில்லாமல் பார்ப்பது, thrill தரும் விளையாட்டுகள் பிடிப்பது  என்று பல விஷயங்கள் பொதுவாக மனிதனில் உண்டு. அதற்கு அடிப்படை risk எடுப்பது rusk சாப்பிடுவது போல நினைத்து ஆசைப்படும் மனம். நண்பர்கள் தூண்டினால் எது வேண்டுமானாலும் செய்வேன், ஒரு quarter கொடுத்தால் எது வேண்டுமானால் செய்வேன் என்று  நான் இருந்த காலங்கள், பெரிய ரௌடிகளிடம் மோதுவது, போலீஸிடம் மோதுவது என்று நான் செய்த

முட்டாள்தனங்கள்   அனைத்தும் , அதனால் என்னை சேர்ந்த அனைவரையும் சிக்கலில் இழுத்து விட்டதும் இப்படிப்பட்ட horror element ஐ விரும்பி ஏற்ற இடங்களே.

common sense , பொதுப்புத்தி இல்லாமல், பாகுபாடு இல்லாமல் இருக்கும் இடங்கள், எல்லாம் இப்படிப்பட்ட horror element ஐ நாம் விரும்பும் இடங்கள். அந்த மனப்பாண்மை நம்மை சமர்ப்பணமோ கடந்த கால சமர்ப்பணமோ செய்ய விடுவதில்லை. ஒரு விஷயத்தை சரி செய்ய படாதபாடு படுகிறோம். ஆனால் மூன்று நாள் பிரார்த்தனையோ, கடந்தகால சமர்ப்பணமோ,  பவர் ஆப் ஆர்கனைசேஷன் போன்ற முறை களையோ செய்ய மனம் வருவதில்லை என்பதை கவனித்தால் இது நன்றாகப் புரியும்.

மூன்றாவது subconcious  perversion இருக்கும் நிலை , பிடியை விட முடியாத , comfort zone ஐ விட்டு வெளியே வர முடியாத,  எதையும் மாற்றிக்கொள்ள மனம்  வராத நிலை. நம் திறமைக்குறைவு, அறிவுக் குறைவு, இயலாமை, பயம், நிலை, அந்தஸ்து, தாழ்ந்த விஷயங்கள் தெரிந்துவிடுமோ என்று நாமே அந்த காரியம் நடக்க வேண்டாம், நடந்து விடக் கூடாது என்று நினைப்போம். ஒரு விஷயம் ஏன் நடக்காது , ஏன் செய்ய முடியாது என்று நாம் சால்ஜாப்பு சொல்லும் இடங்களை கவனித்தால் நம் வக்கிரங்கள், விகாரங்கள் தெரியும்.

உதாரணமாக 2011-2012 இல் மூன்று கோடி வருட turn over இருந்த போது, ஒரே single order இல் ஒன்பது கோடிக்கு  ஒரு ஆர்டர் வந்தது. ஒரு வாரம் படபடப்பாக இருந்தது. எப்படி செய்யப்போகிறோம். நம்மால் முடியுமா, அதற்கான ஆட்கள், resources இல்லையே என்பது போன்ற எண்ணங்களே ஓடிக் கொண்டு இருந்தது. இன்னும் நன்றாக பார்த்தால் உண்மையில் ஆழத்தில் இது வேண்டாம் என்ற இருப்பதே போதும் என்னும் எண்ணங்களும்  இருப்பது தெரிந்தது. அந்த order cancel ஆகிவிட்டது. பெற்றோருக்காக காதலை துறந்து அவர்கள் சொன்ன ஒருவரை மணந்த ஒருவருக்கு பல ஆண்டுகளாக குழந்தை பிறக்கவில்லை. மேல் மனதில் அவர் குழந்தைக்கு ஏங்கினார் என்று தான் அனைவரும் நினைத்தார்கள். ஆனால் ஆழ் மனதில் குழந்தை தராமல் இருப்பது கணவரை பழி வாங்கும் விதம் என்று அவர் ஆழ் மனம் நினைப்பது தெரிந்து அதை அவரை கடந்த கால சமர்பணத்தில் கொண்டு வர சொன்ன பிறகு மூன்று மாதத்தில் அவர் கருவுற்றார். இரட்டை குழந்தை பிறந்தது. இது போன்ற ஆழ்மன விகாரங்கள் நம்மிடம் இல்லை என்று நினைப்போம்.  தாய் அக்கா போன்று இருக்கிறார் என்று சொல்வதை கேட்ட மகள், தாய்க்கு நரைக்க வேண்டும் என்று நினைப்பது, மகளுக்கு நீண்ட கூந்தலை பார்த்து பொறாமைப்படும் தாய் என்று பல உதாரணங்களை கர்மயோகி எழுதியிருப்பார்.

இது போன்ற கேவலங்கள் பல நம் மனதிலும் உண்டு. கடந்த கால சமர்பணத்தில் இவையெல்லாம் லேசாக தலைகாட்டும். ஆனால் அவற்றை நாம் கவனித்து சமர்ப்பணம் செய்ய மாட்டோம். காரணம் அதையெல்லாம் பார்க்கவே நமக்கு பயமாக இருக்கும். பார்ப்பதை தவிர்ப்போம். பல கூடல்களுக்கு முன் அன்னையுடன் அரை மணிநேரம் பற்றியும் - ஒவ்வொரு இரண்டு மணிக்கும் நாம் என்ன செய்து  கொண்டு இருந்தோம் , என்ன செய்து  இருக்க வேண்டும் , செய்த செயல்களில் நம் மன நிலை , இருந்து இருக்க வேண்டிய மன  நிலை என்று எழுதி பார்க்க வேண்டும் என்று சொல்லி இருப்பேன். அதை முயன்று பார்த்தவர்களுக்கு அது எவ்வளவு கடினம் என்பது புரியும். என்னால் சில நாட்களுக்கு மேல்  செய்ய முடியாது . என் கயமைமயை , என் தாழ்ந்த சித்த நிலைகளை பார்க்கும் ,எதிர் கொள்ளும் தைரியம் எனக்கு இல்லை. இவையெல்லாம் subconscious pervertion க்கு உதாரணங்கள். சமர்ப்பணம் தேவையில்லை , யாருக்கு வேண்டும் இந்த அன்னை என்றெல்லாம் கூட தோன்றும். பல சமயங்களில் - எல்லா இடமும் போய்  ஒரு ரவுண்டு வந்து விட்டதால் - வேறு எங்கு போவது என்று தெரியாததால் அன்னையிடம் இருக்கிறேனோ என்று கூட தோன்றும்.

இதில் குறிப்பாக நாம் நல்லவனாக காட்டிக் கொள்ள நாம் சொல்லும் சாக்குகள் இந்த மாதிரி இடங்களை குறிப்பாகக் காட்டும். உதாரணமாக மாதம் ஒரு லட்சம் என்ற target ஐ 2007இல் நான் அடைந்த போது அந்த salary certificate , TDS form களை கர்மயோகியிடம் காட்டி blessing பெறச் சென்றேன். அதை அவரிடம் காட்டி blessing packet பெற்று தந்த ஒருவர், என்னிடம், நீ விரும்பினால் அப்பா உன்னை பார்ப்பார் என்றார். அது எனக்கான அழைப்பு என்பது புரியாமல், ரொம்ப நல்லவனாக யாரையும் பார்ப்பதில்லை என்னும் அவர் விரதம் என்னால் உடையக் கூடாது என்று பெருந்தன்மையாக சொன்னேன். அவ்வளவு நல்லவன் நான். எல்லாம் தெரிந்த அவர் இதை யோசித்திருக்க மாட்டாரா என்பது கூட எனக்குத் தோன்றவில்லை.  அதன் பிறகு அந்த அழைப்பு 2017இல் தான் வந்தது. அப்போது 2007 இல் நான் அவரை பார்த்து இருந்தால், என்ன நடந்து இருக்கும் என்று அவர் சொன்ன போது தான், நான் வாழ்வில் எவ்வளவு விஷயங்களை இழந்திருக்கிறேன் என்று புரிந்தது.

இவையெல்லாம் நாம் இறை ஆன்மாவை கவனிக்காததற்கு அல்லது அன்னையை பற்றிய இடையறாத நினைவு கொள்ள முடியாததற்கு முக்கிய காரணங்கள். நம் personality மூலை முடுக்குகளில் இருக்கும் இது போன்றவற்றை அறிந்து முடிந்த வரை ஒவ்வொன்றாக எடுத்து வெளியே போட்டால், அந்த விழிப்புணர்வு, நாம் அறியாமையில் இருந்து வெளியே வரும் நிலை. காரணம் அப்படி செய்யும் போது அதற்கு எதிரான சரியான, சத்தியத்திற்கான நிலை எது என்பது தானாகவே

நமக்குத் தோன்றும். அதுவே உள்ளூறை ஞானம். இறைவன் விரும்பும் உயர்சித்தம். அதுவே இறை ஆன்மா அடையும் ஆனந்தம்.

Can we bring back – Singapore Utharanam.
You have to be ready to suffer – Flood.

அடுத்த கூடலில் அடுத்த அத்தியாயத்தை பற்றிய கருத்துக்ககளை என் பார்வையில் பகிர்ந்துக் கொள்கிறேன்.

============================================================